காலி மாநகர சபை - 2024

--

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

காலி மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, காலி மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில் 1.6.1 பந்தி (உ) பரிந்துரைகள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை முற்பெறுவனவுகள் மற்றும் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 718,762 தொகை வீதம் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சொத்துக்கள், பொறுப்புக்கள் ஒன்றிற்கு ஒன்று எதிரீடு செய்யக்கூடாத போதிலும், கடை வாடகை முற்பெறுவனவு என வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 110.64 மில்லியன் ஓய்வூதிய பங்களிப்பை கணக்கீடு செய்திருக்கவில்லை.	பதிவு செய்யப்பட்ட சான்றுகள் போதியளவாக காணப்படாமையால் இதுவரை கணக்கீடு செய்யப்படவில்லை என.	சான்றுகளை உறுதிப்படுத்தி ஓய்வூதிய பங்களிப்பை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 2.89 மில்லியனிற்கான நீர்	தொகையில் சரியான தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	செலுத்த வேண்டிய நீர் பில்பத்திரங்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில்

	பில்பத்திரத்திற்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.		வெளிப்படுத்த வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பில்பத்திரங்கள் சமர்ப்பித்திருக்காத 29 நிர்மாண வேலைகளுக்கான ரூபா 67.64 மில்லியன் தொகை கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தமையால் நடைமுறை ஆண்டின் செலவு மற்றும் கடன்கொடுத்தோர் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பில்பத்திரங்கள் சமர்ப்பித்திருக்காத மற்றும் வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்ற செயற்திட்டங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததென.	சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதியின் மீது கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.
(உ)	முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் போது சுட்டிக்காட்டியிருந்த சபைக்குச் சொந்தமான கூட்டுக் கிரயம் ரூபா 4.58 மில்லியன் தொகைக்கான 18 வாகனங்கள் மற்றும் கிரயத்தை இனங்கண்டிருக்காத 19 வாகனங்கள் ஏல விற்பனை மேற்கொண்டு அகற்றப்பட்ட போதிலும், அவற்றின் பெறுமதி நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்படாமையால், நிலையான சொத்துக்களின் பெறுமதி மிகையாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	ஏலவிற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் உரிய பெறுமதி நிலையான சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கியின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 702,934 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	வருட இறுதியில் உள்ளவாறு சரியான முதலீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வட்டி வருமானம் மற்றும் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 10.08 மில்லியன் தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்யப்படும் என.	வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானக் கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மடிகணினிகளின் பெறுமதி ரூபா 168,000 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையால், நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த எண்ணிக்கையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	நிலையான சொத்துக்களின் பெறுமதி சரி செய்யப்பட வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருமான கடன்பட்டோர் மீதி ரூபா 247,561 தொகை குறைவாகவும், முற்கொடுப்பனவு மீதி ரூபா 247,561 தொகை மிகையாகவும் காணப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	வருமானக் கடன்பட்டோர் மற்றும் முற்கொடுப்பனவு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் உறுதிப்படுத்தல்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 151.73 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	2024 பண்டக் கணிப்பீட்டின் படி சபைத் தீர்மானங்களின் மூலம் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாதலில் இனங்காணப்பட்ட பௌதீக இருப்புக்களின் பெறுமதியின் படி எதிர் காலத்தில் பதிவேடுகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மற்றும் ஏனைய இணக்கமின்மைகளை எதிர் காலத்தில் சரி செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மீதிகளின் வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும்.

1.6.3 தொங்கல் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2004 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கு மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இந்த மீதிக்குரிய தகவல்கள் சபையிடம் காணப்படாமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு உள்ளூராட்சி திணைகளத்திற்கு (தெ.ம) அனுப்பப்பட்டுள்ளது என.	மீதி ஏற்படுவதற்கான காரணத்தை இனங்கண்டு விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 384.3 மில்லியன் தொகைக்கான 07 கணக்கு மீதிகள் தொடர்பான அட்டவணைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் மற்றும் பௌதீக ரீதியான இருப்பு மெய்மையாதல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.	எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104	2020 மற்றும் 2024 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை.	குழுவின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் குழுவிற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05	கடையறைகள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பான அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 29 கடையறைகளின் உடன்படிக்கைகள் அவ்வாறு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டு வருகின்றது என.	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 20.23 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 111.86 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
1993 நவம்பர் 13 திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரின் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 15 இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக மாநகர சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற நிலையான வைப்புக் கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18 மில்லியனிற்கான	நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	நிதியினை ஈடுபடுத்துவதற்குரிய முறையான வேலைத் திட்டமொன்று சபையினால் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீதியொன்று காணப்பட்ட போதிலும், சுற்றறிக்கை அறிவுரையின் படி அந்த நிதியை ஈடுபடுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று சபையினால் சமர்ப்பித்திருக்கவில்லை.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர சபையின் நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்க ப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	127,500,000	113,603,805	124,153,951	210,119,927	172,500,000	108,277,586	118,312,162	220,670,073
வாடகை	114,204,000	136,410,070	107,894,265	99,779,748	136,001,000	117,417,075	88,117,584	71,263,943
அனுமதிப் பத்திரக் கட்டணம்	28,029,000	42,271,891	44,098,147	7,670,591	28,529,000	29,916,328	28,090,072	9,496,847
ஏனைய வருமானங்கள்	74,514,000	145,365,210	146,062,396	743,282	87,275,000	121,817,764	125,705,498	1,440,468
	344,247,000	437,650,976	422,208,759	318,313,548	424,305,000	377,428,753	360,225,316	302,871,331

2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு வீதவரி மற்றும் வரி மொத்த நிலுவை வருமானம் ரூபா 220.67 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ஆகிய ரூபா 113.6 மில்லியன் தொகை உட்பட ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 334.27 மில்லியன் தொகை எனினும், சேகரிக்கப்பட்ட	வருமானம் சேகரித்தல் 38.52 சதவீதமாக காணப்பட்டது.	நிலுவை வருமானத்தை சேகரித்தலுக்குரிய நிச்சயிக்கப்பட்ட காலச் சட்டகமொன்றுடனான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் விரைவாக சேகரிக்கப்பட வேண்டும்.

	வருமானம் ரூபா 124.15 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 37 சதவீதமான குறைந்த பெறுமதியுடன் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 210.12 மில்லியனிற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது 22352 வீதவரி அலகுகளில் இருந்து எதுவித வரியும் அறவிடப்பட்டிருக்காமையால் அதற்குரிய நிலுவை மீதி ரூபா 151.54 மில்லியன் தொகை காணப்பட்டது.		
(ii)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 180.63 மில்லியன் தொகைக்கான நிலுவை வீதவரி மீதியில் ரூபா 126.03 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதலும், ரூபா 21.79 மில்லியன் தொகை 03 வருடத்திற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலம் முதலும் நிலுவையாக காணப்பட்ட போதிலும், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(1) இன் பிரகாரம் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சிட்டையிடல் சூனியமாக காணப்பட்ட ஆதன பட்டியலை பெற்றுக்கொண்டு வருமான பரிசோதக உத்தியோகத்தர் மூலம் பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என.	நிலுவை வருமானத்தை சேகரித்தலுக்குரிய நிச்சயிக்கப்பட்ட காலச் சட்டகமொன்றுடனான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நிலுவை வருமானம் விரைவாக சேகரிக்கப்பட வேண்டும்.
(iii)	1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் பிரகாரம் வீதவரி மதிப்பீடொன்று பெற்று வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	**வாடகை**		
(i)	குத்தகையாளர்களுக்கு 15 பேருக்கு 30 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ஒரப்புவத்த மத்திய சந்தையின் 21 நிலத் துண்டுகளுக்கான உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 05	புதிய பெறுமதி மதிப்பீட்டுக்காக எதிர்ப்புக்கள் கௌரவ ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனால் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக வந்திருக்காததுடன் மற்றும்	சுற்றறிக்கை அறிவுரைகளின் படி உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு மற்றும் புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி குத்தகை தொகையை

	மாதங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சொன்று கடந்திருந்த போதிலும், அந்த உடன்படிக்கைகளை புதுப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. புதிய பெறுமதி மதிப்பீட்டுத் தொகையின் படி 2024 திசெம்பர் 31 திகதி வரை இந்த வாடகையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 19.91 மில்லியன் தொகையில் வைப்புத் தொகை என ரூபா 1.14 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்திருந்தது.	பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வரி அறவீடு செய்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என.	அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	காலி சர்வதேச கிரிகட் மைதானத்திற்காக 2013 ஆண்டில் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வருடாந்தம் ரூபா 1.6 மில்லியனிற்காக குத்தகை தொகை 05 வருடங்கள் மாத்திரம் செல்லுபடியாகும். எனினும் அந்த பெறுமதி மதிப்பீட்டை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமல் மீளாய்வாண்டு வரையும் அந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கே குத்தகை அறவீடு செய்யப்பட்ட வந்துள்ளது.	குறிப்பிட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்த்துக்கொண்ட பிறகு விரைவாக பெறுமதி மதிப்பீட்டறிக்கையொன்று பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது என.	புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொண்டு அதன்படி வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 71.26 மில்லியனிற்கான நிலுவை வாடகை வருமானம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 99.78 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது.	நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுளின் பிரகாரம நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 23.24 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றில் 266 கடையறைகள் தொடர்பாக ரூபா 20 மில்லியனிற்கான மீதி 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்பட்ட போதிலும், மாநகர சபை கட்டளைச் சட்டம் 253(1) இன் பிரகாரம் அந்த நிலுவை மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுளின் பிரகாரம நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும்.
(v)	தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர்	03 வருடங்களில் 3 வருடங்களுக்கு ஒருமுறை 10	சுற்றறிக்கை அறிவுரையின் படி

	27 திகதிய 2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தியின் படி கடையறைகளின் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு முறை மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணக்கமின்றி கால மத்திய பஸ் நிலையத்தின் 24 கடையறைகள் 2013 ஆண்டில் வாடகைக்கு கொடுத்த போது வருடாந்த வாடகைத் தொகை மூன்று வருடங்களுக்கு ஒருமுறை 10 சதவீதத்தினால் அதிகரிப்பதன் அடிப்படையில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்திருந்தது.	சதவீதம் என்ற உச்சமட்ட அளவில் வாடகை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கை திருத்திக் கொள்ளப்பட வேண்டுமா என சட்ட உத்தியோகத்தரின் அறிவுரையின் படி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என.	உடன்படிக்கை தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதற்கு இணக்கமின்றி செயற்படுகின்ற உத்தியோகத்தர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(vi)	பிரதான வீதியில் கடைத்தொகுதியில் 31 இலக்க கடையறையின் வாடிக்கையாளரினால் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் கடையறையை விட்டுச் சென்றுள்ளதுடன், ரூபா 20,000 தொகை பெறுமதி மதிப்புடைய இந்தக் கடையறையை மீண்டும் டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்காமையால் 2022 ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரை ரூபா 0.72 மில்லியனிற்காக வருமானமொன்றை சபை இழந்துள்ளது.	வாடகையாளரினால் செலுத்தப்பட்டிருந்த தொகை நிதிக்குழுவின் தீர்மானத்தின் படி சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது என.	கைவிட்டுச் சென்றுள்ள கடையறையை டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(vii)	2017 ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமையில் காணப்பட்ட ஒரப்புவத்த மத்திய சந்தையில் காணப்பட்ட 06 கடையறைகளின் திருத்த வேலை மேற்கொண்டு வருமானம் உழைப்பதற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	திருத்த வேலை மேற்கொண்டு டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	டென்டர் மூலம் கடையறைகளை வாடகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(viii)	காலி மாநகர சபைக்குச் சொந்தமான நகர சந்தையில் காணப்படுகின்ற 236 கடைச் சதுரங்களில் 41 சதுரங்கள் மாத்திரம் 2024 ஆண்டில் வருடாந்த வாடகை என ரூபா	கட்டிடத்தை திருத்த வேலை மேற்கொண்டு மீண்டும் டென்டர் பண்ணுவதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது என.	கட்டிடங்களின் திருத்த வேலை மேற்கொண்டு டென்டர் பண்ணி கடையறைகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது

378,244 தொகை சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 93,309 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீதியான 195 கடைச் சதுரங்கள் தொடர்பாக வாடகை அறவீடு செய்திருக்காததுடன், இந்த கடையறை சதுரங்களின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது வரி அறவீடு மேற்கொள்ளப்படாமல் வருடாந்தம் 10 சதவீதம் அதிகரிக்கும் விதத்தில் வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்தது.		வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்

(i) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் உட்பட ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 51.77 மில்லியன் தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 44.1 மில்லியனாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 7.67 மில்லியனிற்கான நிலுவை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என.	நிச்சயிக்கப்பட்ட காலச் சட்டகமொன்றுடன் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி, நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ii) மீளாய்வாண்டிற்கான அறிவித்தல் பலகை கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்காததுடன், 476 அறிவித்தல் பலகை தொடர்பாக ஆண்டிற்கான ரூபா 14.55 மில்லியன் தொகை சிட்டையிடப்பட்டிருந்தது. அவற்றில் 283 அறிவித்தல் பலகைகளுக்குரிய ரூபா 8.93 மில்லியன் தொகை மேலும் அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்டது.	எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	அறிவித்தல் பலகை தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், தாமதம் இன்றி வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும்.
(iii) மீளாய்வாண்டிற்குரிய வியாபார வரி, கைத்தொழில் வரி, வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் 1 சதவீத அனுமதிப்பத்திரம் அறவிடப்பட வேண்டிய 3258 நிறுவனங்களில் 2645 நிறுவனங்களிலிருந்த மாத்திரம் ரூபா 22.57 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன்,	எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அறிவித்தல் பலகை தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், தாமதம் இன்றி வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

மீதியான 613 நிறுவனங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(iv) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 39 கைத்தொழில் தொடர்பாக 541 நிறுவனங்களில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல், அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 2.87 மில்லியன் தொகை, பரிசோதனை கட்டணமாக ரூபா 5.74 மில்லியன் மற்றும் விண்ணப்பப்பத்திரக் கட்டணமாக ரூபா 319,190 தொகையினை சபை இழந்திருந்ததுடன், இந்த கைத்தொழில்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற சேதம் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்ததமானி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என.	மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்ததமானி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 225.42 மில்லியன் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 29.61 மில்லியன் தொகை பெற வேண்டிக் காணப்பட்டது.	நிலுவை மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றப்படாமை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(i) ரூபா 244.19 மில்லியனிற்கான கிரயமொன்று மேற்கொண்டு பாரிய அளவிலாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கவஷிமா சேதனப் பசளை செயற்திட்டத்தின் செயற்பாட்டு	குறிப்பிட்ட செய்முறையினை செயற்படுத்துவதற்கு தேவையான இடவசதிகள் காணப்படாமை என.	செயற்திட்டம் எதிர்பார்த்தவாறு செயற்படாமைக்கான காரணங்களை இனங்கண்டு செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு

	அலுவல்கள் 2023 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் குப்பை முகாமைத்துவம் முறைப் பிரகாரம மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், சேதனப் பசளை உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.		திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டு இறுதியளவிலும் குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்காததுடன், 2008 ஆண்டு முதல் குப்பைகளை அகற்றுவதற்காக பயன்படுத்தியிருக்கின்ற காணியின் உரிமையை சபைக்கு உரித்தாக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், காணியை தனதாக்குவதற்காக தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	விரைவாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் காணியின் உரிமையை உரித்தாக்கிக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	குப்பையின் வெளியேறுகின்ற கழிவுகள் சுற்றியுள்ள காணிகளுக்கு அண்மையிலுள்ள நீர்த்தேக்கங்களில் கலப்பதனால் ஏற்படக்கூடிய தேசங்களை தடுத்துக் கொள்வதற்காக கழிவுகளை சுத்திகரிக்கும் முறைமையொன்றை நிறுவுவதற்காக ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 44,492 இற்கான செலவொன்று சபையினால் மேற்கொண்டிருந்த போதிலும், அந்த சுத்திகரிப்பு முறைமை 2024 ஆண்டு இறுதியளவிலும் நிறுவப்பட்டிருக்கவில்லை.	பொது மக்கள் பாதிப்புக்கள் தொடர்பாக வழக்கொன்று நடைபெற்றுக்கொண்டிருப்பதனால் அது முடிவடைந்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என.	கழிவுகளை சுத்திகரிப்பு நிச்சயிக்கப்பட்ட காலச் சட்டகத்தினுள் விரைவாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	காலி மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 43 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 25,149 வீடுகள் இடையே மீளாய்வாண்டின் போது சபையின் நுளம்பு ஒழிப்பு பரிசோதனைகளுக்கு உள்ளாகியது 16,660 வீடுகள் மாத்திரமே. 661 நுளம்புகள் பரவும் இடங்களை இனங்கண்டு அவற்றிற்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் இடப் பரிசோதனையொன்று மேற்கொண்ட டெங்கு நோய் பரவக்கூடிய ஆபத்து	களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது என.	களப் பரசோதனை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பான பொறுப்பான உத்தியோகத்தர்களை அறுதியாக பொறுப்புக்கு ஆளாக்க வேண்டும்.

	நிலைமையிலிருந்து அகற்றப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	ரூபா 4.83 மில்லியன் கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 2007 ஆண்டில் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தினை (கொவம் நிலையம்) செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 2.02 மில்லியன் தொகைக்கான 02 டிரக்டர் வண்டிகள் மற்றும் டேலர்கள் விளைவற்றுக் காணப்பட்டது.	செயற்படு நிலைமைக்கு மாற்றப்பட்டு செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என.	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் செயற்படு நிலைமைக்கு மாற்றப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆண்டின் போது குறைந்த வருமானமுடைய பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வினியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தும் போது பாடசாலை உபகரணங்களின் தேவைப்பாடுகளை உரிய முறையில் எதிர்வுகூறாமல் கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 3.15 மில்லியன் பெறுமதியான 10 வகையான பாடசாலை உபகரண அலகுகள் 15,302 தொகை மீதியாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 143,170 தொகைக்கான 08 பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரண விடயங்களின் அலகுகள் சேதமடைந்திருந்தது.	தகைமைகளை அவதானித்து மேற்கொண்டு வினியோகிக்கும் போது எதிர் பார்த்த எண்ணிக்கையில் முரண்கள் ஏற்படுவதனால் புத்தக எண்ணிக்கையொன்று மீதியாக காணப்பட்டது என.	தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2023 ஆண்டு முதல் 2025 பெப்ரவரி 18 கணக்காய்வுத் திகதி வரை பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் வினியோகிப்பதற்காக களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட எண்ணிக்கையின் படி ரூபா 167,328 தொகை பெறுமதியான 06 விடயங்களின் 985 அலகுகிற்கான குறைவொன்று காணப்பட்டது.	களஞ்சிய பதிவேடுகள் உரிய முறையில் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என.	குறைவுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்களை இனங்கண்டு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபை நிதியத்திலிருந்த பணம் செலவிடப்பட்டு மந்திரிமார்களுக்கு வினியோகிக்கப்பட்டிருந்த ரூபா 773,100 தொகை பெறுமதியான 09 மடிகணினிகள், ரூபா 395,991 தொகை பெறுமதியான டெப்கள் மற்றும் ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான 28 தொலைபேசிகள் மற்றும் பெறுமதியை இனங்கண்டிருக்காத 10 பென்டிரய்வ்கள் மற்றும் 11 மாநகர சபைக் கட்டளைச் சட்டங்கள் மந்திரிமார்களிடம் திருப்பப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கையடக்கத் தொலைபேசிகளை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கொள்திறன் பெறுமதியை மீண்டும் அறவீடு செய்வதற்கு மந்திரிமார்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது என	விரைவாக அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான ரூபா 3.25 மில்லியன் தொகைக்கான பொப் கெட் இயந்திரம், ரூபா 3.05 மில்லியன் தொகைக்கான கல் அரைக்கும் இயந்திரம் மற்றும் ரூபா 88,000 இற்கான சீமெந்துக் கற்கள் மற்றும் இடைச்சொறுகல் கற்கள் உற்பத்தி இயந்திரங்கள் 2015 ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு ஆகஸ்ட் வரையான காலத்தினுள் செயற்படாத நிலைமையில் காணப்பட்ட போதிலும், திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொப் கெட் இயந்திரம் மற்றும் கல் அரைக்கும் இயந்திரம் திருத்த வேலை மேற்கொள்ளும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	இந்த இயந்திரங்களை விரைவாக திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது ரூபா 16.2 மில்லியன் தொகைக்கான காலி மாநகர சபையின் பொறியியலாளர் செயற்களத்தின் நவீனமயப்படுத்தும் ஒப்பந்த வேலை சாட்டப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரிடம் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் குறிப்பிட்ட தினத்தில் வேலை பூர்த்தி செய்திருக்கவில்லை. ஒப்பந்த வேலைக்குரிய காப்புறுதி அணவலின் செல்லுபடியாகும் காலம் 2025 பெப்ரவரி 11 திகதியும், முற்பண பாதுகாப்பு முறியின் செல்லுபடியாகும் காலம் 2025 மார்ச் 11 திகதியும் காலவதியாகியிருந்த போதிலும், 2025 ஏப்ரல் 05 திகதி வரை கால நீடிப்பு செய்திருந்ததுடன், தாமதத்திற்கான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அதேபோல், ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த	மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என.	தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியதுடன், நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அல்லது பின்னர் சமர்ப்பிக்கின்ற பில் பத்திரங்களிலிருந்து கழித்துக்கொள்ள வேண்டும். மேலும், காப்புறுதி அணவல் மற்றும் செயலாற்றுகை பாதுகாப்புமுறியின் காலத்தை

முதலாவது பில்பத்திரத்தில் ரூபா 2.67 மில்லியனிற்காக நிறைவேற்றப்படாத வேலை விடயங்கள் உட்படுத்தப்பட்டிருந்தது.		நீடித்துக்கொள்ள வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலின் படி தனது விடயப் பரப்பின் படி நிலைபேறான அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் இலக்குகளை இனங்காண வேண்டியதுடன், மாநகர சபையினால் அவ்வாறு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்காண வேண்டும்.